# இரட்டைக்காப்பியங்கள் காட்டும் சமூக நிலைகளில் விழுமியங்கள்

**பா. பரிதா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), திருச்செங்கோடு

**'நாம் எதையும் எதிர்கொண்டு வாழுவோம், இன்றைய துணிச்சல் நாளை வரும் துன்பங்களை கூட துரத்திவிடும்" என்றவிழுமியச்சிந்தனைகளுடன்......**

**முன்னுரை**

ஐம்பெருங்காப்பியங்களுள் முதன்மையான இரண்டு காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன கதைகருத்தாலும், காலத்தினாலும் ஒன்றாக தொடர்புடையதாக அமைந்துள்ளது. மணிமேகலை ஒரு புரட்சிக் காப்பியம், சிலம்பபை போன்று புரட்சிக்கு வழிகாட்டும் காவியம், ஆனாலும் சிலப்பதிகாரம் உணர்த்தும் புரட்சி வழிவேறு மணிமேகலை உணர்த்தும் புரட்சி வழி வேறு சிலப்பதிகாரம் அரசியல்புரட்சியை கூறுகிறது. மணிமேகலை சமுதாயப்புரட்சியை எடுத்துக்கூறுகிறது.

சங்க காலச் சமுதாயத்தை தொடர்ந்து வருகின்ற சிலப்பதிகாரக்காலச் சமூகமும், அதனுடைய அமைப்பில் மணிமேகலைகாலச்சமூகமும் ஒத்து இருப்பதை அறியஇயலுகின்றது. இரட்டைகாப்பியத்தில் வாழ்ந்த மாந்தர்கள் குழுக்களாகவும், குடும்பங்களாகவும் வாழ்ந்துள்ளனர். அக்கால மக்களின் சமூக வாழ்க்கை, திருமணம், குடும்பம், சாதிமுறைகள், பரத்ததைமை போன்ற செய்திகள் கூறப்பட்டுள்ளது.

சீத்தலைச்சாத்தனார் துறவு நெறிப்பட்ட மணிமேகலையின் கதையை மேற்கொண்டு, துறவாத சமூகப் பழக்கவழக்கங்களைப் பெரிதும் சேர்க்காமல் கதையை மட்டும் வளர்த்துச் செல்வதால், இந்தகாவியத்தில் சிலம்பில் உள்ள அதிக கதைமாந்தர்களைக் காட்டமுடியவில்லை. சிலப்பதிகாரத்தில் அதிகளவு சமுகச் செய்திகளைக் கூறியள்ளதால் பலசமுதாயப் பிரச்சினைகளைக் காண இயலும், மணிமேகலையில் கதையின் தொடக்கமே துறவைக் கூறுவதாக அமைவதால், துறவினைப் பற்றியே அதிக செய்திகளைக் கூறுவதை அறிய முடிகின்றது. சிலப்பதிகாரம் இல்லறத்தில் தொடர்ந்து துறவிலே முடிவடைகின்றது. மணிமேகலை துறவில் தொடங்கி துறவு நெறிகளில் நிறைவு செய்கின்றது என்று ஆராய்ந்து அறியும் நோக்கத்துடன் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது.

**சமூக வாழ்க்கை விளக்கம்**

சங்ககாலத்தமிழ் அறிஞர்கள் சமுகம் பற்றி பலவாறு கூறினாலும், சமூகம் என்பது 'ஓர் இனக்குழு" அமைப்பாகும். சாதி அச்சமூகத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்கும். அதனுடன் இனக்குழப் பண்புகள் நிலைத்திருப்பதை அறிய இயலுகின்றது.

சிலப்பதிகாரக் காலச்சமுதாயம் வாழ்ந்த நில அமைப்புகள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை' என ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இப்பகுப்புகள் மக்களை சங்ககாலத்திலே இருப்பதைக் காண இயலுகின்றது. இந்த ஐந்துவகை நிலங்கள் அடிப்படையில் மக்களை 'குறவர், இடையர், உழவர், சேர்ப்பன், எயினர்" என அழைப்பதையும் அறியலாம்.

இவ்வாறு ஐந்துவகையான நிலப்பகுதிகளையும், மக்களையும் கூறும் சிலப்பதிகாரம் 'பாலை" என்ற பெயரில் நிலம், தனியாக இல்லை என்பதையும் அது முல்லை, குறிஞ்சி என்ற நிலத்தின் திரிபால் வந்தது என்பதையும் கூறுகின்றது.

இதனயே,

**முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்கு துயருறுத்துப்**
**பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்**

என்ற பாடல் வரிகள் காட்டும். தொல்காப்பியமும் நான்கு வகை நிலங்களைக் கூறுவதை அறிய இயலும். சிலம்பில் குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்து வந்தவர்கள் குன்றவர், வெற்பன், சிலம்பன், குறமகள், கொடிச்சியர், குறத்தியர் என்று அழைப்பதையும் அறியலாம். இவர்களுடைய தொழில் தேன் எடுத்தல், வேட்டையாடுதல் என்பதாகும், இதனையே,

**குலமலை உறைதரு குறவர்**
**நறவுக்கண் உடைத்த குறவர் ஒதையும்**

என்ற வரிகளின் மூலம் அறிய இயலுகின்றது.

இதே மாதிரி முல்லை நிலத்தில் வாழ்பவர்கள் கோவலா், ஆயா், ஆய்ச்சியா் என்று கூறப்பட்டனா், இவா்களுடைய தொழில் ஆடுமேய்த்தல், மாடுகளை கண்போல் காத்தலாகும். மருதநில மக்கள் உழவா், உழத்தியா், கடைசியா் இவா்கள் பயிா்த்தொழில் செய்து வாழ்ந்தவா்கள், நெய்தல் நிலத்தில் வாழ்ந்தவா்கள் பரதவா், பரதா், சோ்ப்பன், நுளையா் இவா்கள் மீன் பிடித்து வாழ்ந்தனா். பாலை நிலத்தில் வாழ்ந்தவா் எயினா்கள் இவா்கள் ஆநிரையயைக் கவா;ந்து வாழ்ந்தனா், என சிலம்பில் கூறப்படும் ஐந்து வகை நிலங்களையும், அங்கு வாழ்ந்த மக்களைப் பற்றியும், தொழில்களையும் பற்றியும் அறிய இயலுகின்றது.

**தமிழா்களின் மண முறைகள்**

மனித வாழ்க்கையில் இன்றியமையாத நிகழ்வு என்வென்றால் திருமணம் தான் ஒரு குடும்பத்தின் இத்தகைய திருமணம் நடைபெறும் முறைகளில் சடங்குகளில் ஒவ்வொரு நாட்டிற்கும் வெவ்வேறாக வேறுபாடுகள் இடம்பெறுவதை அறியலாம். சோவியத் ஒன்றியத்தில் நடைபெறும் திருமணங்கள் இன்னும், பழங்காலத் திருமண விழாவில் பாடப்படும் கிராமியப்பாடல் களைக்கேட்க முடிகின்றது. மேலும் பழைய பண்பாடு நெறி குறையாமல் மணமகளை 'மகட்கொடை" அளித்து கணவனுடைய வீட்டிற்கு வழி அனுப்பி வைத்தல், சடங்குகள், மணமக்கள் சீரும் சிறப்புடன் வாழவேண்டும் என்பதற்காக அடையாளமாக இன்னும் உப்பும் ரொட்டியும் வழங்கும் சமபிரதாயங்கள் இருப்பதைக் காண இயலுகின்றது.

மலேசியாவில் கலப்பு திருமணங்கள் தான் அதிகம் இருப்பினும், பொருளாதாரத்தை மையமாகக் கொண்டே நடைமுறையில் உள்ளது என்பதை அறிய இயலுகின்றது. ஆனால் ஐப்பான் நாட்டுத் திருமணம் முறைகளில் கலப்புத்திருமணம் என்பதே இல்லை, மாறாகக் காதல் மணம் பற்றி நல்ல மதிப்பும், உரிமையும் உள்ளது. ஐப்பானில் ஆணும், பெண்ணும் சிறிதுகாலம் நெருங்கிப் பழகி ஒருவரை ஒருவா் நன்கு புரிந்து கொண்டபின்பு, பெரியோா்களிடம் கூறி திருமணம் செய்துகொள்கிறாா்கள். திருமணத்திற்கு முன்பு காதலனும், காதலியும் நெருங்கிப் பழகுவதை ஐப்பானிய மொழியில் 'மிஸ் கொக்கின்" என்று குறிப்பிடுவதை அறிய இயலுகின்றது. திருமண முறைகளை ஆராய்ந்த எம். மாணிக்கம்வாசகம் ஐந்து முறைகளாகியுள்ளதாக கூறுவதை அறியலாம், அவை முறையே,

- களவுத் திருமணம்
- விலை கொடுத்துப் பெண்ணை மணத்தல்
- ஏறுகோள் மணம்
- முதல் மனைவிக்குத் குழந்தைபேறு இல்லையென்றால் மறுதிருமணம்
- போரில் வென்று பெண்ணை மணத்தல்

இவ்வாறு ஐந்து திருமண முறைகளையும், பிறமணங்களையும் காணலாம்.

**களவு மணம்**

சிலப்பதிகாரத்தில் குறவா், பரதவா் போன்றேவா்கள் தாழ்ந்த குலத்தில் பிறந்தவா்கள். இவா்கள் திருமணம் ஆகாத ஆடவா்களும் பெண்களும் ஒருவரை ஒருவா் சந்தித்துக் காதலைப் பரிமாறிக் கொள்வாா்கள். குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறமகளிா் குருவி, கிளி முதலிய பறவைகளை ஓட்டுவதற்காகத் தினைக்காட்டிற்குச் சென்று வரும்போது வெற்பா்களைச் சந்தித்து களவு மணம் செய்து கொள்வாா்கள்.

களவு வழித் திருமணத்தில் ஈடுபடுபவர்கள் நான்காவது சாதியைச் சார்ந்தவர்கள் மறவர், எயினர், கோவிலர், வேளாளர், குறவர் போன்றவர்கள். இதில் அரசர், அந்தணர், வணிகர் ஆகிய வருணத்தைச் சார்ந்தவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்ற கருத்தினைச் சிலம்புவழியாக காண இயலுகின்றது.

**ஏறுகோள் மணம்**

சங்க அகப்பாடல்களின் முல்லைக் கலிப்பாடல்களிலிருந்து பலர் கூடியிருக்கும் கூட்டத்தில் காளைகளை வலியக் கொண்டுவந்து, அக்காளையினை அடக்குபவனுக்கு தனது பெண்ணைத் திருமணம் செய்து வைப்பார்கள். இந்த மணமுறையினை இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவையில் எடுத்துரைப்பதைக் காணலாம்.

**மல்லல மழவிடை யூர்ந்தாற்குளைளிம்**
**முல்லையம் பூங்குழல் தான்**

என்ற வரிகள் மூலம் சங்ககாலச் சமூகத்தில் நிலவி வந்த திருமணமுறைகள் தொடர்ந்து சிலம்பில் உள்ளது என்பதை அறியஇயலுகின்றது.

**போரில் வென்று பெண்ணை மணம்செய்தல்**

ஒரு மன்னிடம் மற்றொருமன்னன் பெண் கேட்டுவர, பெண் கொடுக்கவில்லையின்றால், கொடுக்காத மன்னனிடம் போர் தொடுத்து வெற்றி பெற்று பெண்ணை மணம் முடிப்பது மகட்பாற்காஞ்சியில் இடம் பெறுவதையும் சிலம்பில் உள்ளதை அறியலாம்.

**மதி முடிக்கு அளித்த மகட்பால் காட்சியும்**

என்ற வரி மூலம் அறிய இயலுகின்றது. ஆகவே இதுவரை அறிந்த செய்திகளால் சிலம்புக்காலத்தில் அந்தணர், வணிகர் போன்றவர்களுக்கு தனியான ஒரு திருமண முறையும், பிற வர்ண முறைகளுக்கு வேறுமாதிரியான திருமண முறையும் அக்காலத்தில் வழக்கில் இருந்ததையும் அறிய இயலுகின்றது.

**மணிமேகலையில் திருமண முறைகள்**

சங்கப்பாடல்களில் கற்பிலும், களவிலும் அலர் தூற்றுவதையும், அந்த அலர் தலைவியின் உள்ளத்தை எவ்வாறு சமன்படுத்தும் என்பதையும் அறியஇயலும்.

**அலரின் தோன்றும் காமத்தின் மிகுதி**

என்ற வரி உணர்த்துவதை அறியலாம்.

சீத்தலைச்சாத்தனார், தருமதத்தனையும், அவனுயை மாமன் மகளான விசாகையையும் எழுந்த அலரினையும் அதைக்கோட்ட விசாகை உலக அறிவியலுள்ள தெய்வத்தால் தமக்கு ஏற்பட்ட இடரினைப் போக்கினாள் என்பதையும் அறியமுடிகிறது.

இதனையே

**மைத்துனன் மனையாண் மறுபிறப் பாகுவேன்**
**இப்பிறப் பில் வேண்டுங் கூடேன்**

என்ற பகுதியினால் இப்பிறப்பில் உன்னேடாடு வாழ விரும்பாமையை உறுதியுடன் கூறினார் என்ற செய்தினைக் காணஇயலுகின்றது.

**கணவனை இழந்த பெண்களின் நிலை**

கற்புடைய பெண் தனது கணவன் இறந்த உடனே இறந்தாலும் தீப்பாய்ந்து இறத்தலும், கைம்மை நோன்பிருந்து உண்ணாமல் இறந்துபோதலும் கற்புத்தன்மைக்கு சான்றாக அமைந்துள்ளது.

**ஊரீ ரேயோ ஒள்ளடி லீமம்**
**தாரீ ரோவெனச் சாற்றினர் கழறி**

என்ற வரிகள் வாயிலாக தன் கணவன் கலம் கவிழ்ந்து இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்ட ஆதிரை எமக்கு ஈமம் அமைத்துத் தருமாறு கேட்கிறாள் என்பதை அறிய இயலுகின்றது.

மேலும் சாத்தனார் மூலமாகக் காப்பியத்தின் வழியே கற்பு, விதவை, பத்தினிப் பெண்கள் செய்திகளையும் பெண்களின் உயர்ந்த நிலைகளையும் காணமுடிகின்றது.

**இரட்டைக் காப்பியங்களில் சாதிமுறைகள்**

சாதி என்பது ஆதியில் தோன்றியதுஇல்லை, மாறாக பாதியில் மனிதனால் படைத்துக் கொண்டதேயாகும். அவ்வாறு தோன்றிய சாதி தொழில்களின் அடிப்படையில் பாகுபாடுடைந்தது. இந்தியாவைத் தவிர மற்ற அனைத்து நாடுகளிலும் இனப்பாகுபாடு இல்லை அதாவது, நால்வகை இனம் தோன்றியதாகவும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கு வகைச்சாதியும் அவற்றுள் பல உட்பிரிவுகள் தோன்றி, இன்று எண்ணிலடங்க சாதிகள் தோன்றியதை அறிய இயலுகின்றது. தொல்காப்பியம் மிகப் பழமையான நூல் அவற்றுள்ளும் நால்வகை மக்களைப் பற்றிய செய்திகள் உள்ளது. அவர்கள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பவராவர்.

**மாயோன் பாணியும் வருணப் பூதர்**
**நால்வகைப் பாணியும் நலம் பெறு கொள்கை**

என்ற வரிகள் வாயிலாக கடலாடு காதையில் அரசர், வணிகர், வேளாளர், அந்தனர் ஆகிய நால்வகையான சாதியினர் பற்றி பூதங்கள் கூறுவதை உரையாசிரியர்கள் உரையிலும் அறிய இயலுகின்றது. இந்திரவிழா எடுத்தகாதையில் காருகர், காழியர், கவியர், பாசவர், வாசவர், ஓசுநர், கண்ணுள் வினைஞர், முதலியோர் பெயர்கள் இடம்பெறுவது அவர்களின் தொழில் அடிப்படையாகத்தான் என்ற செய்திகளைக் கூறப்படுவதால் சிலம்பு காலத்தில் ‘சாதி” தொழில் அடிப்படையில் தோன்றியிருக்கலாம் என அறியமுடிகின்றது.

**மணிமேகலையில் சாதிமுறைகள்**

சிலப்பதிகாரம் போன்று மணிமேகலையிலும் சாதி முறை தோன்றியதை அறியஇயலுகின்றது.

**அந்தணர்**

மணிமேகலையில் சாத்தனார் கூறுகையில், ஆபுத்திரன், சிந்தாதேவி, தந்த அமுதசுரபியைக் கொண்டு காதினைத் துளக்கியது. அவனின் மனநிலை அறிய இந்திரன் மண்ணுலகம் வந்தான். வந்தவன் அந்தணர் வடிவில் வந்தான் என்ற செய்தியினை அறிய இயலுகின்றது. இதனையே

**ஆருயீர் முதல்வன் தன்முன் தோன்றி**
**இந்திரன் வந்தேன் யாது நின் கருத்து**
**உன் பெருந் தாதைதுறுபயன் கொள்க”.**

என்ற வரிகள் அந்தணர் வடிவில் இந்திரன் வந்தான் என்ற செய்தியை அறியஇயலுகின்றது.

**அரசர்கள்**

**மாதவர் நோன்பும் மடவார் கற்பும்**
**காவலன் காவல் இன்றெனின் இன்றால்**
**ஈங்கிவன் தன்னையும் ஈமத் தேற்றக்**
**கணிகை மகளையும் காவல் செய்க”**-என்ற வரிகளும்.
**யான் செயற் பாவ திளங் கோற் றன்னைத்**
**தான் செய் ததனால் தகவிலன் விஞ்சையன்** -என்ற வரிகளும்

அரசன் ஆணையே எல்லாவற்றிலும் வலிமை, உறுதிவாய்ந்தது அரசனே மேலதிகாரம் படைத்தவன் என்பதை காணலாம். காலவேகத்தை அடக்கிய உதயகுமரன், நாடக மடந்தையர் வீதியில் வரும்போது எட்டிக்குமரன் தொழுது வணங்கினான் என்ற செய்திகளையும், மாதவரும், மற்ற மன்னர்களும் வாழ்த்தினார்கள் சமுகத்தில் அரசனுக்கு இருந்த உயர் மதிப்பினை அறிந்துக் கொள்ளஇயலுகின்றது.

**வணிகர்கள்**

**வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**

**பிறவும் தமபோற் செயின்"**

என்ற வள்ளுவரின் வரிக்கு ஏற்ப வணிகர்கள் என்பவர் நடுவு நிலை தவறாமல் இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். இது குறித்து, சாத்தனார் கூறுகையில்,

**வாணிக மரபின் வருபொருளீட்டி**
**நீணிதித் செல்வனாய் நீணில வேந்தனின்**
**எட்டிப் பூப்பெற் றுயர்ந்தோ ளாயினன்** - எனத் தருமதத்தன் வணிகன் வாயிலாகக் கூறுவதை அறியலாம். தானம் பல செய்வதையே புத்த சமயநெறிகள் கூறுகிறது. வணிகப் பெருமக்கள் அன்றைய காலகட்டத்தில் சமுதாயத்தில் சிறப்பான இடத்தை பெற்றிருந்தனர். அவர்களின் நாணயச் சிறப்பையும், கொடைத்தன்மையும், தானம் செய்வதிலும் வள்ளன்மை படைத்திருந்தனர். அதற்கும் மேலாகப் பௌத்த மதத்தில் பல அறங்கள் செய்தும், ஆலயம் பலவகைமைத்து ஆன்மிகத்தில் ஈடுபாட்டுடன் வந்தமையை அறியலாம்.

**வேளாளர்**

**உழுவார் உலகத்தார்க் கணி** எனத் தொடங்கும் வள்ளுவரின் குறளுக்கு இணங்க வேளாளர் தொழில் செய்வோரை போற்றிப் புகழ்கிறார். ஆனாலும் இத்தன்மையான சிறப்பு மணிமேகலையில் இடம் பெறவில்லை என்பதை அறியமுடிகின்றது.

**பெண்களின் கடமைகள்**

மக்களினத்தில் இரு பாலினம் என்றால், ஆண் இனம் புறத்திற்கும், பெண் இனம் அகத்திற்கும் என சமூகம் பெண்களை தனித்து வைத்துள்ளது. ஆனாலும் காலத்தின் போக்கினால் இன்று ஆண்களுடன் உடல் உழைப்பிலும், இன்ப துன்பங்களிலும் பங்கேற்கும் நிலை ஏற்பட்டு உள்ளதை கண் கூடாக அறிய இயலுகின்றது. சிலப்பதிகாரக்காலத்தில் வாழ்ந்த பெண்கள் முக்கிய இடத்தில் இடம்பெயர்கிறார்கள். இதனையே இளங்கோ கூறுகையில்,

**மக்களின் ஒம்பு மனைக் கிழத்தி**
**பெருமனைக் கிழத்தியர் பெரு மகிழ் வெய்தி**

என்றும் அக்காலத்தில் உள்ள பெண்களைப் பாராட்டியுள்ளார். மேலும் மிகக்குறைந்த வயதில் திருமணம் செய்து வந்த கருத்தினை கண்ணகிக்குப் பன்னிரு வயதில் திருமணம் என்பதையும். மாலை நேரங்களில் பெண்கள் முல்லை மலரை நெல்லுடன் தூவி இறைவனை வழிப்பட்டனர் என்ற செய்தியினையும் அறியஇயலுகின்றது. திருமால், முருகன், சிவன் முதலிய தெய்வங்களை வழிப்பட்டனர். இதனை,

**அகல் நகர் எல்லாம் அரும் பவிழ் முல்லை**
**நிகர் மலர் நெல்லோடு தூஉய்"**

என்ற அடிகள் சுட்டுகிறது.

'விருந்தோம்பல் என்ற பண்பு, சிலப்பதிகாரத்தில் மிகவும் சிறப்பித்து கூறப்படுகின்றது. கணவனைப் பிரிந்த பெண்கள் தம்மை ஒப்பனை செய்துகொள்வதில்லை என அறியமுடிகின்றது.

கொலைக்களக் காதையில் கோவலனைப் பிரிந்து வாழ நேர்ந்த பொழுது தன்னால் இல்லறக் கடமைகளைச் செய்ய முடியாமல் போனதே என்று கண்ணகி வருந்தி கோவலனிடம் கூறுவதன் மூலம் விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை என்ற தொடர் தெளிவாகக் கூறுவதை அறியலாம். கவுந்தியடிகளால் அடைக்கலமாக்கப்பட்ட கண்ணகி கோவலனை தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்ற மாதரி விருந்து போற்றிய தன்மையும் விருந்து புறந்தரும் சிறப்பையும் அறிய முடிகின்றது.

கண்ணகி தன் கணவன் இறந்ததும் தானும் இறக்காமல் மாறாக தன்னுடைய கணவன் குற்றமற்றவன் என்பதை இவ்வுலகத்திற்கு காட்டவே சிலகாலம் உயிர்வாழ்ந்து நிருபித்துக் காட்டிவிட்டு அதில் வெற்றிபெற்றவுடன் வானுலகை அடைந்நாள். கோவலன் இறந்ததும் மாதவி உயிர்துறக்கவில்லை, ஆனாலும் துறவுவாழ்வை மேற்கொண்டாள், தமது ஆடம்பர வாழ்க்கை,

அலங்காரப் பொருட்களை கலைந்துவிட்டுத் துறவுவாழ்வை மேற்கொண்டாள். தம் மகள் மணிமேகலை வளர்ந்து துறவு வாழ்வை மேற்கொள்ளச் செய்தாள் என்பதையும் அறிய இயலுகின்றது.

**கற்பின் தனித்தன்மை**

பெண்களுக்கு இன்றியமையாத பண்பு கற்பு. இதனை தொல்காப்பியர் காலத்திலிருந்தே கூறப்பட்டுள்ளது. திருமணச்சடங்குகளையும் கற்பு என்கிறார். அச்சம், நாணம், மடம் ஆகிய பண்புகளுடைய இல்லறக் கடமைகளில், கற்புடைமை சிறந்து விளங்கியுள்ளதையும், தம் கணவரைத் தவிர பிற ஆடவரை மனதாலும் எண்ணாத தன்மையே கற்பு என தொல்காப்பியர் மூலம் அறிய முடிகின்றது. கண்ணகி துயரினைக் கண்ட அவளுடைய தோழி தேவந்தி பல ஆறுதல்களை கூறினாள். மேலும் சோமகுண்டம், சூரிய குண்டம், பொய்கையாறு போன்ற ஆறுகளில் முழ்கி மன்மதனை வணங்கி வந்தாள், உனது கணவர் திரும்ப வருவார் என்றாள். அதற்குக்கண்ணகி அது 'பீடன்று" என குறிப்பிடுகின்றாள். அதாவது தவத்தினால் ஒன்றைப் பெறவேண்டுமே தவிர, வேறொரு ஆண் தெய்வத்தை வணங்கிக் தமது கணவனை அடைவதை பெண்ணிற்குப் பெருமையில்லை என்கிறாள். இதன் மூலம் கண்ணகி கற்பின் தன்மைக்கு மகுடமாக விளங்குவதை அறிய இயலுகின்றது. சிலம்பினை விற்கச் சென்ற தமது கணவன் பழி சுமத்தப்பட்டு கொலை செய்யப்பட்டான் என்பதனை அறிந்து மன்னனை நோக்கிச் சென்று, தன் கணவன் குற்றமற்றவன் என நீதியைப் புகட்டி வெற்றிக் கண்டாள். கண்ணகி அதனோடு நில்லாமல்,

**பட்டாங்கு யானு மோர் பத்தினியே ஆமாகில்**
**ஒட்டேன் அரனோடு ஒழிப்பேன் மதுரையும்** **(வஞ்சின மாலை : 36-37)**

எனக் கூறி அரண்மனையைவிட்டு வெளியேறி கண்ணகி தமது இடப்பக்க மார்பைத் திருகி மதுரை நகரத்தின் மீது வீசி எரிந்தாள் எனவும், மதுரை மாநகரமே பற்றி எரிந்தது, இதன் மூலம் கண்ணகியின் கற்புத்திறனை வெளிகாட்டஇயலுகின்றது. இதில் குழந்தைகள், பெண்கள், முதியோா;கள், நோயாளிகள், பசுக்கள் பக்கம் செல்லாது தீயவர்களைக் கொன்றதாக இளங்கோ கூறியதை அறிய முடிகின்றது. மணிமேகலைக் காப்பியத்தில் கற்புக்கரசி ஆதிரை, விதவையின் கற்பின் தன்மைக்கு மாதவி போன்ற பெண்களை சுட்டிக் காட்டியுள்ளார் சாத்தனார்.

**அறங்கள் கூறும் விளக்கம்**

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சமூக நலம் கருதியே பல நல்லறங்களைக் கூறியுள்ளார். அவற்றுள் முக்கியமான முதன்மையான மூன்று அறங்கள்,

**அரைசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதூஉம்**
**உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துலும்**
**ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்**

என இளங்கோவடிகள் கூறவந்த மூன்று கருத்துகளையும் காணலாம்.

பாண்டியன் மன்னனின் செங்கோல் வளைந்து, பிழைத்துக் கொண்டது முதல் அறமாகவும், கண்ணகியின் கற்பு மேன்மைத்தன்மையைக் கொண்டதை இரண்டாம் அறமாகவும், கோவலன் மாதவியைப் பிரிந்தது முதல் அவன் கொலையுண்டது முடிவாக பல நிகழ்ச்சிகள் ஊழ்வினையால் நிகழந்தது என்பதை மூன்றாம் அறமாகவும் அறிய முடிகின்றது.

மணிமேகலையில் சாத்தனா் பௌத்த சமயம் சார்ந்த அறங்களைக் கூறியுள்ளார். அச்சமய அறங்கள் எல்லா மதத்தினருக்கும் உரியதாக பொதுஅறமாகவே விளக்கம் அளிக்கின்றார்.

கள்குடித்தல், ஊன் தின்னுதல் போன்றவை தீயவை எனக் கூறியுள்ளார். நல்லறங்களைப் பின்பற்றினால் உயா்ந்த நிலையினை அடைவார்கள், ஆகவே, சமுதாயத்தில் காணப்படும் தீமைகளை ஒழிக்க முனைந்த நல்லறங்களை சாத்தனா் வழி அறியமுடிகிறது.

கொலை, களவு, காமம், கள், பொய்மை போன்ற ஐந்து தீயச்செயல்களைச் செய்யாது, ஒழுக்க நெறிகளைப் பின்பற்றினால் சமய அறமானது சமுக அறமாக இருக்கும் என்பதை மணிமேகலை வழி அறிய இயலுகின்றது.

**சிலம்பில் பொதுவான அறங்கள்**

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் சில அறச்சிந்தனைகளை கவுந்தியடிகள் வழியே கூறுவதை அறியலாம். இதனையே,

**வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்புநர்க்கு**
**யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள்**

என்ற வரிகளால் அறியமுடிகின்றது. பொய் பேசுபவரைத் தன் பாசத்தால் பற்றிப் புடைத்துண்ணும் பூதம் புகாரில் இருந்ததாகவும், பொய்யான ஒருத்தியை பூதம் கொன்றதை இளங்கோ கூறுவதை அறியலாம். மேலும் குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்றும் குற்றமற்றவன் தண்டனைப் பெறக்கூடாது என்ற அறக்கருத்தினைக் கூறி கற்பவரை அறிந்துக்கொள்ள வைக்கிறார்.

**மணிமேகலையில் பொதுவான அறங்கள்**

மணிமேகலையில் சாத்தனார் மிகவும் வலியுறுத்திக் கூறுவது பசியைப் போக்க வேண்டும் என்ற பேரறமாகும். 'பசியும், பிணியும், நீங்கி வசியும் வளனும் சுரக்க" என்று கூறப்படுவதால் சமூகத்தில் பசித்தோரின் பசிப்பிணியைபோக்குதல் எல்லா தீமைகளுக்கும் தீர்வாக அமையும் என்பதையும், பல தீமைகளுக்கு மூலமாக இருப்பது பசி,பசி,பசி என்னென்ன செய்யும் என்பதை சுருக்கமாக கூறுவதையும் அறியலாம். பசித்தவனுக்கு உணவு இடுவது சிறந்த அறமாகும். ஆற்றா 'மக்களுக்கே உணவிட வேண்டும் என்றும் பசித்தவனுக்கு, உணவிடுபவன் அவனின் உயிரைக் காத்தவனுக்கு சமமாகும் என்பதை சாத்தனார் மூலம் அறிய முடிகின்றது. நாம் வலியச் சென்று பசித்தோர்க்கு உணவளிக்க வேண்டும் என்பதையும், துணைவியர் துணையுடன் சென்று பங்கிட வேண்டுவதே சிறந்த அறமாகும், இதனையே

**பத்தினி யில்லோர் பலவறஞ் செய்யினும்**
**புத்தே லுலகம் புகாஅ ரென்பது**
**கேட்டு மறதியோ...........**

இல்லறக் கடமைகளைப்பற்றி எடுத்துக் கூறுவதை அறியலாம்.

மணிமேகலை பல்வேறு சமயஞ் சார்ந்த சான்றோர்களிடம் சென்று வாதிட்டும், அறவனை அடிகளிடம் நல்லறங்களைக் கேட்டும், சமயக் கொள்கையில் ஈடுபட்டும் அறம் பற்றின சிந்தனைகளை பெரிதும் வளர்த்துக் கொண்டவள் மணிமேகலை என்பதை அறிய இயலுகின்றது.

**வேந்தன் எவ்வழியோ குடி மக்கள் அவ்வழி**

ஆட்சி என்பது மலா்ப்படுக்கை இல்லை, அது ஒரு முள் படுக்கை, மக்களுடைய நலன்களில் ஆர்வமுள்ளவன் மட்டுமே ஆட்சியில் அமர்ந்து நல்லது செய்யமுடியும். நாட்டில் எத்தனை தீமைகள் வந்தாலும் அத்தீமைக்கும் அரசனே பொறுப்பாா்வான். எனவே விழிப்புடன், நோ;மையுடன் பற்றுடன் ஆட்சிபுரிய வேண்டும்.
இதனையே,

**மன்பதை காக்கும் நன்குடிப்பிறத்தல்**
**துன்பமல்லது தொழுதக வில்லெ**

என்ற வரிகள் வாயிலாக அறியஇயலுகின்றது. மேலும் அரசன் என்பவன் என்னென்ன நல்ல செயல்களைச் செய்யவேண்டும் என்பதை இளங்கோ பட்டியிலிருகிறார். பகைமையை அறவே ஒழிக்கவேண்டும். மக்கள் நலன்கருதி சிறந்த முறையில் ஆட்சி செய்யவேண்டும். தீமைகளைக் எதிர்க்கவேண்டும், மக்கள் மனம்போல் ஆட்சிசெய்யவேண்டும், நிலைத்த புகழை ஈட்டவேண்டும். என்பதை இளங்கோ வழி அறியமுடிகின்றது.

அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும் என்றமையக் கருத்தினை நன்கு அறிய இயலுகின்றது. பொய் சொல்வோரைக் தன் பாசத்தால் வயிறு முட்ட உண்ணும் பூதம் புகாரில் இருப்பதாக இளங்கோ, கூறுவதை அறியலாம். இதனை,

**நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு**
**பரகதி இழக்கும் பண்பு ஈங்கில்லை**

என்ற வரிகள் பொய்பேசுபவன் அதற்கான தண்டனையை அனுபவிப்பான் என்ற கருத்தினை அறிய இயலுகின்றது.

**இல்லற, துறவு வாழ்க்கையின் இயல்பு**
**அறனெனப்பட்டதே இல்வாழ்கை** (குறள் -44)

என திருவள்ளுவரின் வாக்கிற்கு ஏற்ப மனித வாழ்க்கை என்பது அறநோக்கத்துடன் அமைய வேண்டும். நீதி இலக்கியத்திற்குக் கதை இலக்கியமாகப் படைக்கப்பட்டுள்ளது. தாம் படைத்த சிலப்பதிகாரம், மனையறம் எனவும் இளங்கோ கூறிகிறார். தமது முப்பது காதைகளில் மனையறம் படுத்த காதை மிகவும் சிறப்பாகவும், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடுடன் மனை அறத்தைக் காப்பாற்றவேண்டும். தனிமனிதரும், மனிதசமூகமும் இல்லறவாழ்க்கையின் மாண்பினை அறிந்து. கடமைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

**அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடல்........."**

என்ற வரிகள் வழியாக இல்லற அறங்களையும், விருந்தோம்பலின் பண்பினைக் கண்ணகி வாயிலாக அறிய இயலுகின்றது.

துறவென்பது விடுதல், துறத்தல், பேரின்பம், முக்தி, மோட்சம் வீடுபேறு, போன்ற பல அகராதி பொருளில் கூறப்படுவதைக் காணலாம். துறவு என்பது இல்லறத்தை விட்டு நீங்கும் நிலையினைக் கூறலாம். துறவுகளில் இயல்புத் துறவுநிலை, சூழ்நிலைத்துறவு, இல்லறமுதிா;ச்சி துறவு என துறவுநிலையினை மூன்றாக சிலம்பதிகாரத்தில் விளக்கம் கூறியுள்ளார் இளங்கோ என அறியமுடிகின்றது.

ஒரு துறவி என்பவன் இயற்கையின் உண்மைகளை உணர்ந்து உள்ளதை உள்ளவாறே அறிந்துக் கொண்டு துறவு நிலையை எய்தவேண்டும் அந்நிலையினை அறிந்தவர் இளங்கோவடிகள் இளம் வயதிலேயே துறவையே மேற்கொண்டதால், அடிகள் என்ற அழைக்கப்பட்டார்.

**அண்ணனுக்கு அரசாட்சி**
**தம்பிக்கு அறிவாட்சி என்று கூறியவர் குணவாயிற்**

கோட்டத்தில் துறவுக்கோலம் பூண்டார். இவ்வாறு எல்லாம் இருந்தும் எல்லாவற்றையும் துறக்கும் நிலையையே துறவியின் வைராக்கியமாக இருந்தது என அறியமுடிகின்றது. மாதவியின் துறவிக்கோலம் இச்சமுதாயம் அறிவிக்காவிட்டாலும், மாதவி அதையெல்லாம் வென்று பௌத்த மதத்தில் துறவுகொண்ட சூழ்நிலைத் துறவியாகிறாள்.

தொண்டிற்கும் துறவுக்கும் சம்பந்தமுண்டு என்று வாழ்ந்தவர் கவுந்தியடிகள் பிறருடைய முயற்சி எதுவுமின்றி தன் முயற்சி இல்லாமல் தன்னுடைய உள்ளம் தானாகவே துறவை நாடிச்சென்று துறவுக்கோலம் கொண்ட இயல்புத் துறவியாகிறார் என்பதை அறியமுடிகின்றது.

பெற்ற மகள் மீது கொண்ட அன்பைக்காட்டிலும், கண்ணகி, கோவலன் மீது கொண்ட அன்பினாலேயே மாதரி உயிர்துறந்தாள். உயிர்துறத்தலுக்கும் மனத்தினுள் துணிவென்பது மிகவும் வேண்டும். அத்துணிவு தான் மாதரியில் புகுந்த தன் உயிர்நீத்தாள் இவளின் துறவுநிலை இல்லறத்துறவி என்பதை அறிய முடிகின்றது.

மாடலமறைவனின்அறிவுரைகளைக் கேட்ட அரசன் செங்குட்டுவன் மறக்கள வேள்வியைத் துறந்து அறக்கள வேள்வியல் புகுவது இல்லமுதிர்வுத் துறவுக்கு சான்றாகியுள்ளது. மேலும் கோவலன் தந்தை பௌத்த மதத்தையும், கண்ணகியின் தந்தை ஆசீவக மதத்தில் துறவியகிறாா;கள். கண்ணகி, கோவலன் தாய் இருவரும் உயிர்நீத்தாக கூறப்படுவதை அறியமுடிகின்றது.

**நிரைவுறை**

இரட்டைக்காப்பியங்களில் அரசா் முதல் ஆயா் வரையும் பல்வேறு நகர மக்களைப் பற்றிக் கூறுவதால் அக்காலச் சமூகத்தில் உள்ள உயா்ந்த சிந்தனைகளை அறிய முடிந்தது. அந்நகர வீதிகள், வீதிகளில் வாழ்வோா் பல கருத்துக்களையும் கூறுதவதால் மிகுதியான செய்திகளை காணமுடிந்தது.

மனிதனுடைய வாழ்நாள் எல்லையை வரையறுத்துக் கூறுவது முடியாத செயலாகும். ஆகவே, வாழும் நாளில் ஒவ்வொருவரும் நல்லவற்றைச் செய்யவேண்டும். நாளை செய்யலாம் என்றால், அந்த நாளை வராமல் போகலாம். வாழ்நாளில் நிலையற்றதன்னை போன்றது தான் இளமை, யாக்கை, செல்வம் இம்மூன்றின் தன்மையறிந்து வாழவேண்டும் என்பதை அறிய முடிந்தது.

சமுதாயச் சீா்கேட்டிற்குக் காரணமான பசி முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய செய்திகளை அறியமுடிகின்றது. அவரின் தலையாய நோக்கமோ, பாரதமெங்கணும் வேண்டும் பசிப்பிணி அறுக வேண்டும் என்பதை அறிய முடிகின்றது. அறத்தொண்டினை சமுதாயத்தொண்டாக செய்ய வேண்டும் என்பதை விளக்கிய விதத்தை அறிய முடிகின்றது.

இரட்டைக்காப்பியத்தில் சிலப்பதிகாரம் இல்லறத்தில் தொடங்கி துறவறத்தில் முடிவதையும், மணிமேகலையில் துறவில் தொடங்கி துறவு நெறியினை கடைசி வரை நிறைவு செய்வதை அறிய முடிகிறது.

சங்க காலச் சமூக நிலைகளில் இருந்த உயா்ந்த சிந்தனைகள் சிலப்பதிகாரம், மணிமேகலை காலச்சமுதாயத்தில் தாக்கம் பெற்று வரும் காலங்களில் மாற்றம்பெறும் நிலைகளையும், மாற்றத்துடன் கூடிய உச்சநிலையினைக் ஆராய்ந்து ஆய்வினை அறிந்துக் கொள்ள முடிந்தது.

**பாா்வை நூல்கள்**

1. ‘சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும் அடியாா்க்கு நல்லாருரையும் டாக்டா் உ.வே.சா.பதிப்பு, சென்னை.
2. ந.மு.வேங்கடசாமி நாட்டா் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை. ‘மணிமேகலை மூலமும் உரையும், சாரதாபதிப்பகம் சென்னை.
3. டாக்டா். வ.சுப.மாணிக்கம் ‘இரட்டைக் காப்பியங்கள், செல்லப்பாபதிப்பகம். மதுரை.
4. பேராசிரியா்.க.வெள்ளை வாரணன் ‘சங்ககாலத் தமிழ் மக்கள்”, மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம் - 608 001
5. சிலம்புச்செல்வா் டாக்டா் ம.பொ.சி.சிவஞானம் ‘சிலப்பதிகாரத் திறனாய்வு” தமிழ்நிலையம் சென்னை-17.
6. கே.ஜீவா பாரதி ‘சமுதாயப் பாா்வையில் மணிமேகலை” ஜீவாபதிப்பகம் சென்னை-17.